தமிழ் இணையக் கல்விக்கழகம்
**TAMIL VIRTUAL ACADEMY**

மேற்சான்றிதழ்க் கல்வி (Higher Certificate Course)
**HG30 - நிலை 3 - (Grade 3)**

நேரடி எழுத்துத் தேர்வு (Offline Examination)
மே, ஜூன் – 2015

நேரம் : 2.30 மணி மதிப்பெண் : 75

பிரிவு - 1

**I** எல்லா வினாக்களுக்கும் <u>ஒரு சொல் / தொடரில்</u> விடை தருக.
Answer all questions in a word / line. **(10 x 1 = 10)**

1. நும் பாடப்பகுதியில் உள்ள இறைவாழ்த்துப் பாடலைப் பாடியவர் யார்?
2. திருக்குறள் எங்கு அரங்கேற்றம் செய்ததாகக் கூறப்படுகிறது?
3. நாரை விடு தூது என்னும் நூலின் ஆசிரியர் யார்?
4. மாணிக்கவாசகரால் பாடப்பெற்ற நூல் எது?
5. ‘செந்தமிழ் ஞாயிறு’ என்ற பட்டம் சூட்டிப் பாராட்டப் பெறுபவர் யார்?
6. காவிரியின் குறுக்கே கல்லணை கட்டியவன் யார்?
7. குற்றாலத்தில் மொத்தம் எத்தனை அருவிகள் உள்ளன?
8. பகுபத உறுப்புகள் எத்தனை?
9. பாக்கள் எத்தனை வகைப்படும்?
10. இரட்டுற மொழிதல் அணிக்கு அமைந்த மற்றொரு பெயர் யாது?

பிரிவு - 2

**II** எவையேனும் <u>பத்து</u> வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.
Answer any ten questions in three lines each. **(10x2=20)**

1. நாமக்கல் கவிஞர் பாடிய நூல்கள் யாவை?
2. சான்றோர்க்கு அணி என்று திருவள்ளுவர் எதனைக் கூறுகிறார்?
3. சிலப்பதிகாரம் எத்தனை பிரிவுகளை உடையது?
4. சிறுபஞ்சமூலம் – குறிப்பு வரைக.
5. சத்திமுத்தப் புலவர் நாரையை எங்ஙனம் வருணித்துப் பாடுகின்றார்?
6. கண்ணதாசன் இயற்றிய நூல்களுள் எவையேனும் நான்கினைக் குறிப்பிடுக.
7. தமிழில் உள்ள காவியங்களாகப் பாவாணர் குறிப்பிடுவன யாவை?
8. மணியை ஊர்மக்கள் ‘கிண்டல் மணி’ என்று கூறக் காரணம் யாது?
9. குற்றால மலைக் காடுகளில் வாழும் வனவிலங்குகளைக் குறிப்பிடுக.
10. உயிரினங்களில் பறவைகள் மிகச் சிறப்பானவையாகக் கருதப்படுவது ஏன்?
11. பாண்டியன் நெடுஞ்செழியனைப் புகழ்ந்து பாடிய சங்கப் புலவர்கள் யாவர்?

12. ஆகுபெயர் என்றால் என்ன? ஒரு சான்று தருக.
13. பூப்பெயர்ப் புணர்ச்சி பற்றி எழுதுக.
14. முல்லைத் திணைக்குரிய நிலமும் பொழுதும் யாவை?
15. உழிஞை, நொச்சி – இத்திணைகளுக்கு விளக்கம் தருக.

## பிரிவு - 3

**III எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை தருக.**

Answer any <u>five</u> questions in six sentences each. **(5x4=20)**

1. சிறுபஞ்ச மூலம் அழகுகள் ஐந்து என்று எவற்றைக் கூறுகின்றது?
2. நாரை விடு தூதில் புலவர் தம்முடைய நிலையை எவ்வாறு குறிப்பிடுகின்றார்?
3. 'நாராயணா' என்னும் நாமம் எவ்வெவற்றைத் தரும் என்று திருமங்கை ஆழ்வார் கூறுகிறார்?
4. தமிழ்மொழி இனிமையான மொழி என்பதைப் பாவாணர் எங்ஙனம் விளக்கிக் காட்டுகின்றார்?
5. புலி அருவி பற்றிக் கூறப்பட்டுள்ள கருத்துகளை எழுதுக.
6. பாண்டியன் நெடுஞ்செழியன் கூறிய சூளுரை யாது?
7. விடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
8. பிறிதுமொழிதல் அணியின் இலக்கணத்தைச் சான்று தந்து விளக்குக.

## பிரிவு - 4

**IV ஏதேனும் <u>ஒன்றனுக்குப் பதினைந்து</u> வரிகளில் விடை தருக.**

Answer any one of the following questions in fifteen sentences. **(1x10=10)**

1. காளமேகப் புலவர் பாம்பையும் எள்ளையும் சிலேடை முறையில் ஒப்பிட்டுப் பாடும் திறத்தை விளக்குக.
2. குறிஞ்சித் திணைக்குரிய கருப்பொருள்களை எழுதுக.
3. தமிழ்நாட்டின் சிறப்புகளாகப் பாவாணர் கூறுவனவற்றை எழுதுக.

## பிரிவு - 5

**V ஏதேனும் <u>ஒன்றனுக்கு மூன்று பக்கக் கட்டுரை</u> வடிவில் விடை தருக.**

Write an essay in three pages to any one of the questions. (1x15=15)

1. முனிவரிடம் ஆசி பெற்ற பின் மணிக்கு நடந்தது என்ன என்பதை விவரிக்க.
2. காவிரியாறு தன் வரலாறு கூறுதல் பற்றி ஒரு கட்டுரை வரைக.

✻✻✻✻✻

□